# சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்புப் பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்புப் பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக் கருத்திட்டத்தின் வலுவூட்டல் பிரிவில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தகைமையினைக் கொண்ட உள்வாரியான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகவல் தொழில்நுட்ப முகாமையாளர்**

ஆகக்குறைந்த தகைமைகள் மற்றும் சேவை அனுபவம்

அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் ஒரு பாடமொன்றாக உள்ளடக்கப்பட்ட அல்லது/கணனி பொறியியலில் பட்டமொன்று

மற்றும்

ஆ) ஆய்வுத் தரவுகளினை ஒருங்கிணைத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்வதனூடாக கணனித் துறையில் 08 வருட அனுபவம்.

2. பயிற்சி முகாமையாளர்

ஆகக்குறைந்த தகைமைகள் மற்றும் சேவை அனுபவம்

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டமொன்று மற்றும் பயிலுனர்களினைப் பயிற்றுவித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு/டிப்ளோமா/ சான்றிதழ் பாடநெறியொன்றினை மேற்கொண்டிருத்தல் மிகவும் பொருத்தமானது.

மற்றும்

ஆ) உரிய களத்துறையில் 08 வருட சேவை அனுபவம்.

3. **தொடர்பாடல் முகாமையாளர்**

ஆகக்குறைந்த தகைமைகள் மற்றும் சேவை அனுபவம்

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு பட்டம்

மற்றும்

ஆ) உரிய களத்துறையில் 08 வருட சேவை அனுபவம்.

ஆ. முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூப இலக்கம் 01/2019 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

இ. மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தங்களின் விருப்புடன் விண்ணப்பத்தினை (விரிவான சுய விவரம்) 2020 செப்ரெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் முன்வைத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்பம் கையேற்கப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

உ. தகைமையினைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் நேரமுகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

ஒப்பம்/நீல் பண்டார கப்புகின்ன,
செயலாளர்.